# கிண்ணியா பிரதேச சபை

# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 20ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 செப்தெம்பர் 25 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 26 திகதி சபையின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிண்ணியா பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பேரேட்டின் படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான பெறவேண்டிய சந்தை குத்தகை மீதி ரூபா.4,971,046 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் அம்மீதி ரூபா.4,438,198 ஆகக் காட்டப்பட்டதினால்

பெறவேண்டிய சந்தைக் குத்தகை மீதி ரூபா.532,848 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததது.

(ஆ) பதவியினர் கடன் பேரேட்டின் படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிலுவையாகவுள்ள பதவியினர் கடன் மீதி ரூபா.428,895 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா.407,895 தொகையாக காட்டப்பட்டதினால் நிலுவையாகவுள்ள பதவியினர் கடன் மீதி ரூபா.21,000 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காகப் பெறவேண்டிய வியாபார உரிமைக் கட்டணம் ரூபா.83,780 தொகையானது கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்காகப் பெறவேண்டிய சந்தைக் கடை குத்தகை ரூபா.549,074 தொகையானது கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 சனவரி தொடக்கம் ஒக்டோபர் வரையான காலப்பகுதிக்குள் கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகத்தின் பெறுமதி ரூபா.69,920 தொகையானது கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

கடமையை விட்டு விலகிச் சென்ற மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா.137,749 தொகையை 2006 ஆம் ஆண்டிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

1.3.3 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு இனம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| காணிகளும், கட்டடங்களும் | 1,441,311 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதிகள் இயந்திரங்கள் | 1,308,575 | நிலையான சொத்துப் பதிவேடுகள், மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| தளபாடங்கள் | 683,720 | |
| மோட்டார் வாகனம் | 3,029,710 | |
| முற்பணப் பெறுகை | 173,544 | முற்பண பதிவேடும் காலப்பகுப்பாய்வும் |
| குத்தகை வைப்பு | 453,175 | குத்தகை வைப்பு பதிவேடு |
| கடன் வழங்குனர் | 27,806 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் |

### 1.3.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | விடயங்கள் |
|---|---|
| (அ) 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவு | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனம் கண்டு அவற்றின் ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள். | |
| (i) அத்தியாயம் ஏஐஐ இன் பிரிவு 158 | மீளாய்வாண்டிற்கான திரட்டிய செலவினம் பற்றிய மாதாந்த தொகுப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) அத்தியாயம் ஏஜஜ இன் பிரிவு 104 | செயலாளர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் கணக்கீட்டு ஆவணங்கள் நாள்தோறும் செவ்வை பார்த்து அதிலுள்ள மீதிகளின் செம்மை பற்றி முதலெழுத்து ஒப்பம் இடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் ஏஜஜ இன் பிரிவு 165 | மீளாய்வாண்டிற்கான பிரதான பேரேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் | |
| பிரிவு 880 | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) மாகாண நிதி ஒழுங்கு விதிகள் | |
| PFR 131.(3) | மீளாய்வாண்டில் ரூபா.3,370,974 தொகையான வருமானம் பெறப்பட்டதிற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களின் அடியிதல்கள் காணாமல் போயிருந்த போதிலும் உரிய் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (ii) PFR 187.2 | மீளாய்வாண்டில் ரூபா.2,106,258 கூட்டுத் தொகையான 68 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் காணாமல் போயிருந்த போதிலும் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (உ) ஐயுஜ/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | கணனிகளின் உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.203,899 ஆகும். இதற்கெதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.141,236 ஆக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2013 திசெம்பர் 31இல் நிலுவை மீதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 35,000 | - | (35,000) |
| வாடகை | 1,466,000 | 509,802 | (956,198) |
| சேவைகளுக்கான கட்டணம் | 509,450 | 301,860 | (207,590) |
| அரசிறை வருமானம் | 9,592,855 | 10,187,862 | 595,007 |

#### 2.2.2 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக கட்டணம் அறவிடல்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள 06 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக சபையினால் கட்டணங்கள் அறவிடப்படாததால் சபை வருடாந்தம் ரூபா.18,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 13 மோட்டார் வாகனங்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கிற்கு கொண்டுவர எட்டு ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1991 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆண்டுவரை நூல் நிலையத்தின் அங்கத்தவர்களுக்கு இரவல் வழங்கப்பட்ட 1,167 எண்ணிக்கையான நூலக புத்தகங்களை மீளப்பெறுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டிற்கான மெய்யாய்வுச் சபை அறிக்கையில் 138 களஞ்சியப் பொருட்களும் 227 நூலகப் புத்தகங்களும் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்திற்கான ரூபா.527,701 தொகையான பங்களிப்புப் பணத்தையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான ரூபா.60,181 தொகையான பங்களிப்பு பணத்தையும் உரிய நிதியங்களுக்கு அனுப்பி வைக்காமல் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) ரூபா.2,507,805 கூட்டுத்தொகையான ஓய்வூதியப் பங்களிப்பு மீதிகள் கொடுத்துத் தீர்க்கப்படாது ஏழு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படுகின்றது.

4. மனிதவள முகாமைத்துவம்

----------------------------------------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியணியினர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | பற்றாக்குறை |
|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | -- | 01 |
| உதவியாளர்கள் | 16 | 12 | 04 |
| சிற்றூழியர்கள் | 23 | 12 | 11 |
| | 40 | 24 | 16 |

(அ) முகாமைத்துவ சேவை அதிவிசேட தரம் ஐ இற்கான பதவி வெற்றிடமாக இருந்த போதிலும் 07 வருடங்களுக்கு மேலாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 04 முகாமைத்துவ சேவை தரம் III,II ஆகிய பதவிகளுக்கும் 03 சிற்றூழியர்களுக்குமான வெற்றிடங்கள் ஒரு வருடம் மற்றும் 02 வருடகாலமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. திண்மக்கழிவு முகாமைத்துவம்

திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்தின் கீழ் ரூபா.1,345,000 பெறுமதிக்கு திண்மக்கழிவு சேகரிக்கும் நிலையத்திற்கு கம்பிவலையால் சுற்றுவேலி அமைப்பதற்காக சபையினால் 2011 நவம்பர் 22 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒப்பந்தகாரர்களால் நிர்மாணிக்கப்பட்ட 171 சதுர அடி நீளமான சுற்றுவேலி இனந்தெரியாதவர்களால் அகற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) கம்பிவலை சுற்றுவேலியின் மீண்டும் தூண்கள் நிறுவுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) திண்மக்கழிவு சேகரிக்கும் நிலையத்தின் தளத்திற்கு கிரவல் வழங்கி பரப்புவதற்கும் அதனை அமுக்கியினால் அமுக்குவதற்கும் ரூபா.1,430,000 தொகை செலுத்தப்பட்ட போதிலும் பரப்பப்பட்ட கிரவல்கள் அமுக்கியினால் அமுக்கப்படாததால் பல இடங்களில் குழிகள் தோன்றியிருந்தன.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

6.1 உள்ளகக் கணக்காய்வு

---

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

7. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

---

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான முகாமைத்துவம்

(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(உ) ஒப்பந்த முகாமைத்துவம்